[1979 நவம்பர் 5

திரு. க. சுப்பு : அவர் ரூல் கோட் செய்ததால் கூறுகிறேன். ஸ்பெஸிஃபிக்காக இருந்தால் 83 (3) விதியின்கீழ் எழுப்பலாம். ஸ்பெஸிஃபிக்காக இல்லையென்றால், ரூல் 242 அடிப்படையிலே, சபாநாயகராகிய நீங்கள் அனுமதி அளிக்கிறீர்கள். அவ்வளவு தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு, எனக்காக வாதாடுகிறார்கள், பரவாயில்லை. நான் என்னுடைய சொந்தக் காலிலேயே நின்று சமாளிக்கிறேன், அவர்கள் உட்கார வேண்டும்.

(3) அறிக்கை அளித்தல்.

அ. துணை வினா ஒன்றுக்கு அளித்த விடைக்கு திருத்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 10-1-1978-ஆம் தேதியன்று, 186-ஆம் எண் வினாவின் கீழ், எழுப்பப் பெற்ற துணை வினாவிற்கு அளிக்கப் பெற்ற விடைக்கு, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றை அளிப்பார்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, இப்பேரவையில் 10-1-78 அன்று வேலை நிதி ஊழியர்களின் சம்பள விகிதங்கள் திருத்தம் பற்றிய வினா ஒன்றிற்கு பதிலளிக்கையில் திரு. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் அவர்களின் துணைக் கேள்விககு, அரசு ஆணை எண். 1632, பொதுப்பணித் துறை, நாள் 26-10-77-ல் திருத்தப்பட்ட சம்பள விகிதங்கள் நில நீர்ப் பிரிவிலுள்ள எல்லா வேலை நிதி ஊழியர்களுக்கும் பயன் விளைவிக்கும் என்று அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. நில நீர்ப் பிரிவிலுள்ள 18 வகை வேலை நிதி ஊழியர்களில், 11 வகையினருக்கு மட்டுமே மேற்கூறிய அரசு ஆணையில் சம்பள விகிதங்கள் திருத்தப் பட்டுள்ளது என்பதுதான் சரியான நிலைமை என்று இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது, நிலநீர்ப் பிரிவிலுள்ள ஏனைய ஏழு பிரிவினருக்கு சம்பள விகிதங்களை திருத்துவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(4) அறிவிப்புகள்.

(அ) அலுவல் ஆய்வுக் குழு கூட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 3-11-79 அன்றைக்கு அலுவல் ஆய்வுக் குழு இன்று காலை 10-30 மணிக்கு கூடுமென்று நான் அறிவித்திருந்தேன். அதை நான் இப்பொழுது ஒத்தி வைத்துள்ளேன் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.